பக்கங்கள் 15+4

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 28 திங்கட்கிழமை 11.03.2024 அதிர்வு 224

## முன்னாள் அரசியல் கைதி ரி.ஐ.டியின் விசாரணைக்கு

(கே.வசந்தன்)

வவுனியாவில் வசிக்கும் முன்னாள் அரசியல் கைதியும் போராளிகள் நலன் புரிச் சங்கத்தின் தலைவருமான செ.அரவிந்தன், கொழும்பு பயங்கரவாத 04▶



# தப்புமா சபாநாயகரின் தலை?

# 19ஆம் திகதி விவாதம் ஆரம்பம்

## ஆளுங்கட்சி உறுப்பினர்களை கொழும்பில் இருக்குமாறு பணிப்பு

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

குறித்த பிரேரணை மீது இரு நாட்கள் விவாதம் நடத்தப்பட்டு 20 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படலாம் எனத் தெரியவருகின்றது.

மார்ச் மாதத்துக்குரிய 2ஆவது வார நாடாளுமன்ற அமர்வு 19 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அவ்வாரத்துக்குரிய நிகழ்ச்சி நிரல் தொடர்பில் ஆராய சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு அடுத்த வாரம் கூடும். 04▶

## வெடுக்குநாறிமலை ஆலயத்தில் கைது செய்யப்பட்ட எட்டுப் பேரும் கைவிலங்குடன் தொடர்ந்தும் சிகிச்சை



(கே.வசந்தன்)

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரும் கைவிலங்குகளுடன் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மகா சிவராத்திரி தினத்தன்று வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு நாளை வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில், அவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர் என்று சட்டத்தரணிகள் கடந்த சனிக்கிழமை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்படி 8 பேரையும் மன்றின் உத்தரவுக்கமைய வவுனியா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அழைத்துச் சென்றிருந்தனர். 04▶

# பாதாளக் குழுக்களை சேர்ந்த 43 பேருக்கு எதிராகப் பெறப்பட்டுள்ள சிவப்பு அறிவிப்பு




பாதாளக் குழுக்களை சேர்ந்த 43 பேருக்கு எதிராகச் சர்வதேச சிவப்பு அறிவிப்புகள் பெறப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பொலி ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதாள குழுக்களில் அடையாளம் காணப்பட்ட மேலும் பலருக்கு எதிராக சர்வதேச சிவப்பு அறிவிப்புகள் பெறப்படவுள்ளன.

டுபாயில் கைது செய்யப்பட்டுள்ள பாதாள கும்பலைச் சேர்ந்த மன்னா ரமேஷ் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து டுபாய் அரசுடன் ஆலோசிப்பதாக நம்புகின்றோம் என்று மேலும் தெரிவித்தார்.



# வெளிநாடு அனுப்பி வைப்பதாக 60 லட்சம் ரூபா பணம் மோசடி!

## ஊரெழு பகுதியை சேர்ந்த யுவதி கைது!!

யாழில் வெளிநாடு அனுப்பி வைப்பதாகக் கூறி 60 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊரெழு பகுதியை சேர்ந்த 27 வயதான யுவதி ஒருவரே யாழ்ப்பாணம் பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் பெண்ணின் வங்கிக் கணக்கில் கோடிக் கணக்கான ரூபா பண பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடிச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

யாழ்ப்பாண நகர் பகுதியை அண்மித்த பகுதியில், வெளிநாடு செல்பவர்களுக்கான தொடர்பகம் ஒன்றை ஆரம்பித்து வெளிநாடு செல்ல விரும்புவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கல், விசா தொடர்பிலான தெளிவூட்டல்கள் போன்ற சேவைகளை கட்டணம் பெற்று வழங்கி வந்துள்ளார்.

அவரை நம்பி யாழ்ப்பாணத்தின் பல பாகங்களை சேர்ந்தவர்களும் பணத்தை வழங்கி வந்துள்ளனர். அவர்களில் ஒருவர் சுமார் 60 லட்சம் ரூபா பணத்தை வழங்கியுள்ளார்.

பணத்தை வழங்கியவர் தனது வெளிநாட்டு பயண ஏற்பாடுகள் தாமதமாகி வந்தமையால், அப்பெண் மீது சந்தேகம் கொண்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அப்பெண்ணைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் போது அவரது வங்கி கணக்கு இலக்கம் ஊடாக சுமார் 4 கோடி ரூபாவுக்கும் அதிகமான பண பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளதைக் கண்டுபிடித்துள்ளனர்.

கொழும்பு உள்ளிட்ட இதர பகுதிகளில் வெளிநாட்டுக்கு ஆள்களை அனுப்பி வைக்கும் முகவர்களாகச் செயற்படும் மோசடியாளர்கள் யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களில் தமக்கான முகவர்களாகச் சிலரை நம்பிக்கைக்காக அமர்த்தி அவர்கள் ஊடாக பெரும் பணம் மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் தொடர்பில் அனைவரும் விழிப்புடன் இருக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.



# 252 மருந்து பொருள்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு நிலவுகிறது!

நாட்டில் சுமார் 252 மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க நிலையத்தின் தலைவர் டாக்டர் சமால் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் பதவி விலகி ஐந்து மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் தற்போதைய சுகாதார அமைச்சரும், அமைச்சின் செயலாளரும் மருந்துப் பொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வு வழங்கவில்லை என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பிரதேச மருத்துவமனைகளில் மருந்து கொள்வனவு செய்வதற்காக மருத்துவமனை பணிப்பாளர்களுக்கு நிதி வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறையில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடைமுறையால் முறைகேடுகள் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என்றும் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் மருந்துப் பொருள் கொள்வனவு கிரமப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெடுக்குநாறியில் பொலிஸின் செயற்பாடுகள் காட்டுமிராண்டித்தனமானவையாக இருந்தன!

## யாழ். மாநகர முன்னாள் முதல்வர் மணிவண்ணன் கண்டனம்




வெடுக்குநாறிமலையில் காட்டு மிராண்டித்தனமாகச் செயற்பட்ட பொலிஸாருக்கு எதிராக யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண் ணன் கடும் கண்டனங்களை வெளி யிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில்,

சிவ பக்தர்களுக்குரிய கவலைகள் நீங்கி, காரிய வெற்றியை தரக் கூடிய நாள் மகா சிவராத்திரி விரத நாளாகும். அந் நாளில் சிவாலயங்களில் பக்தர்கள் இரவு முழுவதும் கண் விழித்து ஓம் நமச்சியவாய என்ற திரு நாமத்தை உச்சாடனம் செய்வார்கள்.

அவ்வாறே தமிழர்களின் மிகத் தொன்மையான வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்திலும் சிவபக் தர்கள் ஒன்று கூடி சிவபெருமானுக்கு ஆராதனைகளைச் செய்தார்கள்.

அந்த நேரத்தில் சிவபூஜையில் கரடி போல் உள்நுழைந்த பொலிஸார் அங்கிருந்த சிவபக்தர்கள் மீது தாக் குதல் நடத்தி வலுக்கட்டயமாக வெளி யேற்றினர். அத்தோடு ஆதி சிவனக்குப் படையல் செய்வதற்காகக் கொண்டு வந்த பொருள்களையும் தூக்கி வீசி யமை மிலேச்சத்தமான காட்டு மிராண் டித்தனமான செயலாகும்.

ஆரம்பத்தில் வீதித்தடைகளை யிட்டு ஆதிசிவன் ஆலயத்துக்கு பக் தர்கள் செல்வதைத் தடுத்தும் பின்னர் கால்நடையாக நடந்து செல்லுமாறு அனுமதித்து அங்கு சென்றவர்கள் குடிப்பதற்கு குடி தண்ணீரைத் தடை செய்து வன்கொடுமை புரிந்தனர்.

பொலிஸார் இட்ட இந்தத் தடைகளை யும் நெருக்கடிகளையும் தாண்டி ஆதி சிவன் மீது கொண்ட பக்தியால் ஆதி சிவன் ஆலயத்தில் இரவு நேரத்தில் சிவபூஜையில் ஈடுபட்ட சிவபக்தவர்கள் மீது பொலிஸார் தமது கோரத் தாண்ட வத்தை நிகழ்த்தினர்.

பெண்கள், சிறுவர்கள், குழந்தை கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று எந்த பாரபட்சமும் பார்க்காமல் தூக்கியெறியப்பட்டார்கள்.

உலக மகளிர் தினத்தில் சிவபூஜை யில் ஈடுபட்ட மகளிர் மீதும் பொலிஸார் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அவர்களின் ஆடைகளைக் கிழித்து அவமதித்தனர்.

தமிழர்களின் மிகத் தொன்மையான ஆதிசிவன் ஆலயத்துக்குப் பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள மக்கள் செல்லுகின்ற போது அவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து பாதுகாப்பு வழங்குகின்ற பொலிஸார் தமிழர்கள் சிவபெரு மானின் முக்கிய விரதநாளாகிய சிவ ராத்திரியில் கூட அடக்கு முறைகளைப் பயன்படுத்திப் பூஜைவழிபாடுகளைத் தடைசெய்கின்றார்கள் என்றால் இது தமிழர்கள் மீதான அப்பட்டமான திட்ட மிடப்பட்ட கலாசாரப் பண்பாட்டு இன அழிப்பாகும்.

இவ்வாறான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைகளுக்கு எதிராகவும் மரபுசார் வழிபாட்டுரிமைக்காகவும் தமிழர்கள் ஒன்றுபட்டு போராட வேண் டியது இன்றைய காலத்தின் நியதியா கும்.-என்றுள்ளது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் கடந்தவாரம் மூவருக்குச் சைக்கிள்






யாழ்ப்பாணம், வடமராட்சி தொண்ட மனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வு ஆச்சிரிம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமை யில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

முதல் நிகழ்வாக பஞ்சபுராணம் ஓதப்பட்டதை தொடர்ந்து சைவப்புலவர் கந்தசாமி கைலைநாதன் அவர்களின் சிவராத்திரி தொடர்பான சொற்பொழிவு இடம் பெற்றது.

அதனை தொடர்ந்து தெரிவு செய்யப் பட்ட அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் தரம் 10 மாணவி ஒருவருக்கும், உடுவில் மகளிர் கல்லூரி தரம் 10மாணவிகள் இருவருக்கும் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சி ரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதி யான் ஆச்சிரம தொண்டர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மனைவியை வாளால் வெட்டி படுகொலை செய்த கணவன்

மனைவியைக் கணவன் வாளால் வெட்டிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் இரத்தினபுரியில் இடம்பெற்றுள்ளது.

40 வயதான பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக கணவன், மனைவி இருவரும் தனித்தனி வீடுகளில் வசித்து வந்த நிலையில், உயிரிழந்த பெண் பிள்ளைகளுக்கான புத்தகங்களை எடுத்து வருவதற்காகக் கணவன் வீட்டுக்கு நேற்று சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

43 வயதான கணவன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# லொறி மோதி இளைஞன் சாவு!




உழவு இயந்திரத்துக்கு எரிபொருளை ஏற்றிக்கொண்டிருந்த இளைஞன் ஒருவர் வீதியில் தென்னை நெல் நாற்றுகளை ஏற்றிச் சென்ற லொறியில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல், ஹலவத்தை – திகன்வெவ பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த ஜனிது தனஞ்சய என்ற 22 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

தனது தந்தைக்குச் சொந்தமான சிறிய பேக்கோவை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்றபோது உழவு இயந்திரத்தில் எரிபொருள் தீர்ந்து போனதையடுத்து எரிபொருளை எடுத்து உழவு இயந்திரத்தில் ஊற்றிக் கொண்டிருந்தபோது அதிவேகமாக வந்து வீதியை விட்டு விலகிய லொறியில் மோதியதில் இளைஞன் தூக்கி வீசப்பட்டார்.

லொறியின் முன் சக்கரங்கள் இளைஞனின் மீது ஏறியதால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தப்புமா சபாநாயகரின்...**

இதன்போது மேற்படி திகதிகள் உறுதிப்படுத்தப்படலாம் எனத் தெரிய வருகின்றது.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் எதிரணிகள் எல்லாம் ஒன்றுபட்டுள்ளதால், விவாதம், வாக்கெடுப்பு வாரத்தில் ஆளுங்கட்சி உறுப்பினர்களைக் கொழும்பில் முகாமிட்டு இருக்குமாறு அரச உயர்பீடத்தால் பணிக்கப்பட்டுள்ளது.

**வெடுக்குநாறிமலை...**

இதன்போது மேற்படி 8 பேரினதும் உடல் நிலையைக் கருத்தில்கொண்டு அவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கைவிலங்குடன் அவர்கள் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



**முன்னாள் அரசியல்...**


விசாரணைப் பிரிவுக்கு (ரி.ஐ.டி.) அழைக்கப்பட்டுள்ளார்.

இதற்கான கடிதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அரவிந்தனின் வீட்டுக்குச் சென்று நேற்று வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதியும் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவருமான செல்வநாயகம் அரவிந்தனை (ஆனந்தவர்மன்) நாளை காலை 9 மணிக்குக் கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணை பிரிவுக்கு வாக்குமூலம் பெற வருமாறு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

அந்த அழைப்பாணையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விசாரணைப் பிரிவு 01 இந்த மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு அமைவாக முகநூல் கணக்கு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைக்கு வாக்குமூலம் தருவதற்காக 2024.03.12 ஆம் திகதி காலை 9 மணிக்கு இல149, கெப்பிட்டல் கட்டடம், கிருலப்பனை, நாரஹேன்பிட்ட முகவரியில் விசாரணைப் பிரிவு 01 இன் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்திக்குமாறு தகவல் தருகின்றோம். – என்றுள்ளது.


SRI LANKA POLICE
MESSAGE FORM
From Station: CTID Colombo
To Station: CTID Vavuniya
No. 45
TRUE COPY



# மிகக் குறைந்த வேலை செய்யும் நாடாக இலங்கை இருக்கின்றது!

## எப்படி ஒரு நாடு முன்னேற முடியும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய கேள்வி

உலகின் மக்கள் தொகை விகிதத் தின்படி சராசரியாக 250 பேருக்கு ஒரு அரசு ஊழியர் அரச சேவையில் இருக்க வேண்டும். ஆனால் இலங்கையில் 13 பேருக்கு ஒரு அரச ஊழியர் உள்ளார். இதேவேளை உலகில் மிகக் குறைந்த வேலை செய்யும் நாடாக இலங்கை இருக்கின்ற போது எப்படி ஒரு நாடு முன்னேற முடியும்?.

–இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக மக்கள் தொகை விகிதத் தின்படி சராசரியாக 250 பேருக்கு ஒரு அரச ஊழியர் அரச சேவையில் இருக்க வேண்டும். இலங்கையில் 13 பேருக்கு ஒரு அரச ஊழியர் உள்ளார்.

இவ்வளவு பெரிய பொதுச் சேவை உலகில் எங்கும் இல்லை. இவர்களை பணி நீக்கம் செய்ய நான் கூறவில்லை. அப்படியானால், நமக்குத் திறமையான பொதுச் சேவை இருக்க வேண்டும். இன்று கடிதம் கொடுத்தால் நாளை பதில் சொல்ல முடியும்.

இந்தச் சிறிய நாட்டில் நமது இராணுவம் எவ்வளவு பெரியது. இங்கிலாந்து மற்றும் வங்கதேசத்தை விட நமது நாட்டில் பெரிய இராணுவம் உள்ளது.

உலகில் மிகக் குறைந்த வேலை செய்யும் நாடு இலங்கை. வருடத்துக்கு 170 அல்லது 179 நாள்கள் இலங்கையில் வேலை செய்வதைப் பார்த்தேன். இப்படி ஒரு நாடு முன்னேற முடியுமா? இதில் கவனம் செலுத்துங்கள்.

நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல நாம் உழைக்க வேண்டும். நம் கடமையை நிறைவேற்ற வேண்டும். நேர்மையாக இருக்க வேண்டும், ஊழலை ஒழிக்க வேண்டும். நான் அரசியலில் ஈடுபடாவிட்டாலும், அதைப் பற்றிய ஒரு பெரிய வேலைத்திட்டத்தில் ஈடுபட்டு வருகிறேன்.

இப்போதும் திரும்பிப் பார்க்கிறோம். நமது குறைகளை சரி செய்து கொண்டு கைகோர்த்து முன்னேறினால் அடுத்த தலைமுறைக்கு நியாயம் கிடைக்கும் என நினைக்கிறேன்.

நான் இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் பிறந்தவன். நானும் பாடசாலை மாணவனாக தேசியக் கொடியுடன் சுதந்திர தின விழாவில் பங்கேற்றேன். நமது நாடு அப்போது மிகவும் பணக்கார நாடாக, பலமான நாடாக, பொருளாதார ரீதியாக மிகவும் வலிமையான நாடாக இருந்தது.

வெளிநாடுகளுக்கு கடன் கொடுத்தோம் ஆனால் எழுபதுகளுக்குப் பிறகு இன்றைய நிலை என்ன? இலங்கையர்களாகிய நாம் திரும்பிப் பார்க்க வேண்டிய நேரம் இது.

கடந்த வாரம் பத்திரிகையில் பச்சை மிளகாய் விலையைப் பார்த்தபோது மிகவும் வெட்கப்பட்டேன். இதற்கு முக்கிய காரணம் சுரண்டல். 200 முதல் 300 ரூபா வரையிலான ஒரு கிலோ கரட் கொழும்புக்கு வரும் போது 2,000 ரூபாவாகும்.

விவசாயிக்கு ஒரு சதம் அதிகமாகக் கிடைக்காது. நெல் விவசாயிகளுக்கும் இதே நிலைதான். நியாயமற்ற சுரண்டல் உள்ளது. இவை நிறுத்தப்பட வேண்டும். விவசாயி மகிழ்ச்சியாக இருந்தால் நாமும் மகிழ்ச்சியாக இருக்கலாம். எனவே இலங்கையர்களாகிய நாம் செய்ய வேண்டியது நிறைய உள்ளது.– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தடுமாற்றத்தில் மொட்டு

தற்போதுள்ள அரசியல் சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்த விரும்பினாலும், மொட்டுக் கட்சியினரான ராஜபக்ஷக்கள் பொதுத் தேர்தலையே முதலில் நடத்த வேண்டுமென விரும்புகின்றார்கள் என்று மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் கூட்டணியான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற தமது அணியின் மகளிர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

கிராமங்கள் வரைச் செல்லும் அடிமட்டத்தில் தமக்கு வலுவான ஆதரவு இல்லாததன் காரணமாக, பொதுத் தேர்தலை விட ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரும்புக்கின்றார் என அனுரகுமார சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுஜன பெரமுனவினரோ ஜனாதிபதித் தேர்தல் ஒன்றைத் தங்களின் சொந்தக் கட்சி வேட்பாளருடன் எதிர்கொள்ளும் துணிச்சலுடன் இல்லை என்பது முற்றிலும் உண்மை.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வலுவான வேட்பாளர் ஒருவர் தங்கள் தரப்பில் இல்லாதமை காரணமாக ஜனாதிபதித் தேர்தலை தாம் எதிர்கொள்வது பாதகமானது எனக் கருதுகின்றமையால், ராஜபக்ஷக்கள் முதலில் பொதுத்தேர்தலையே விரும்புகின்றனர் என்று அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த பின்னணியில், ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடக்கும் பட்சத்தில் அதனை எதிர்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இன்னும் தயாராகவில்லை என்பது புலப்படுகிறது என்கின்றார் அனுரகுமார. அது ஓரளவு யதார்த்த நிலைமைதான்.

இலங்கையின் தற்போதைய நிலைவரங்களின்படி தங்களில் - ராஜபக்ஷக்களில் - ஒருவரை உடனடியாக மீண்டும் நாட்டின் தலைவராக அரியணை ஏற்ற முடியாது என்பதை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நன்கு அறிந்துள்ளது.

எனினும், பொதுத் தேர்தல் தங்களுக்கு சாதகமாக இருப்பதாகவே மொட்டுக் கட்சியினர் நம்புகின்றனர். இந்த அடிப்படையிலே, பஸில் ராஜபக்ஷ அண்மையில் அமெரிக்காவில் இருந்து இலங்கை வந்தார்.

பொதுத்தேர்தலை இலக்காகக் கொண்டே பஸில் இலங்கை வருகின்றார் என ராஜபக்ஷக்களுடன் மிகவும் நெருக்கமான உறவை கொண்டுள்ள ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றமையும் கவனிக்கத்தக்கது.

இதற்கிடையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தங்களின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சிக் கட்டமைப்பை உடைத்து, அதிகார வரிசையை மீறி, முறையற்ற விதத்தில் கட்சியின் தனிப்பட்ட நபர்களுடன் - எம்.பிக்களுடன் - ஊடாட்டத்தை நேரடியாகப் பேணுகின்றமை தொடர்பில் அக்கட்சி அதன் கவலைகளை மீண்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாக ஆட்சேபத்துடன் சுட்டிக் காட்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் சந்தித்த போதே ஜனாதிபதிக்கு இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

மொட்டுக் கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேர்தல் அமைப்பாளர்களும் ஏற்கனவே ஜனாதிபதியின் பக்கம் சாய்ந்தமையை அடுத்ததே இத்தகைய கவலைகள் மீண்டும் மொட்டுக் கட்சியினரால் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

தற்போது, மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு குழுவினர் ஜனாதிபதி ரணிலுக்கு முழுக்கமுழுக்க விசுவாசமாக உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளையும் வகிக்கின்றனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கக் கோரி வெளிப்படையாக வாதிடுகிறார்.

எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வரும் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக அனைத்து அறிகுறிகளையும் வெளிக்காட்டிய போதிலும், மொட்டுக் கட்சி இன்னும் எந்தவொரு முறையான முடிவையும் எடுக்கவில்லை என்பதுதான் உண்மை.



# திருகோணமலை முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள்



(எம்.ஏ.ஏ.அக்தார்)

திருகோணமலை பெஸ்ட் ஸ்டெப் முன் பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி அண்மையில் இடம் பெற்றது.

முன்பள்ளி அதிபர் திருமதி நிரோசா தலைமையில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண முன்பள்ளப் பணியகத்தின் பணிப்பாளர் திருமதி தாமர கீதானி, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் முஸ்ஸில், திருகோணமலை மெதடிஸ்ட் கல்லூரியின் அதிபர் திருமதி ஜோன் தேவதாஸ், சட்டத்தரணி திருமதி சன்முகி நிரோசன், பொலிஸ் பரிசோதகர் சிவதர்சன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

# நீச்சல் மற்றும் உயிர்காப்பு பயிற்சி நெறியை பூர்த்தி செய்தோர் பதக்கம் அணிந்து கௌரவிப்பு





(ஆதம்)

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் மூவ் கல்குடா டைவர்ஸ் அமைப்பால் இலவசமாக நடத்தப்பட்ட நீச்சல் மற்றும் உயிர்காப்பு பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றுதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை (10) பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

பாலமுனை இளைஞர்கள் சபையின் தலைவரும் ஆசிரியருமான ஏ.எல்.எம்.சீத் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசிய காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு குறித்த பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களைப் பாராட்டிக் கௌரவித்தார்.

அட்டாளச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயலாளருமான எம்.ஏ.அன்சீல், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம்.றியாஸ், அட்டாளைசேனை பிரதேச சபையின் முன்னாள் உதவி தவிசாளரும், ஓய்வுபெற்ற அதிபருமான எஸ்.எம்.எம்.ஹனீபா, தேசிய காங்கிரஸின் பாலமுனை அமைப்பாளரும், அதிபருமான கே.எல். உபைத்துல்லா, பாலமுனை இளைஞர்கள் சபையின் ஆலோசகரும் வைத்தியருமான எஸ்.எம்.றிபாஸ்தீன், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஏ.எச்.றிபாஸ், அம்பாறை பிரதேச செயலகத்தின் கணக்காளர் எம்.எப்.பர்ஹான், அதிபர் பீ.முஹாஜிரீன், ஆசிரியர் ஐ.எல்.எம்.பாயிஸ் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதன் போது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த பாலைமுனை இளைஞர் சபை உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் என 60 பேர் பதக்கம் மற்றும் சான்றுதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



# மட்டக்களப்பு வின்சன்றி மகளிர் பாடசாலை விளையாட்டுப் போட்டி!





(பழுவூரான்)

மட்டக்களப்பு வின்சன்றி மகளிர் உயர்தர தேசிய பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலையின் அதிபர் திருமதி தவத்திருமகள் உதய குமார் தலைமையில் வெபர் விளை யாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

பாடசாலை மாணவிகளின் பாண்டு வாத்திய இசை முழங்க, அதிதிகள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, தேசி யக் கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைத்து மரியாதை செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இல்ல விளை யாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

இதன் போது பிரதம அதிதிகளுக்கு மாணவிகளின் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

போட்டியில் வெற்றியீட்டிய மாண வர்களுக்கும் இல்லங்களுக்கும் வெற் றிக் கிண்ணங்களும், சான்றிதழ்களும் பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வின் விசேட அதிதியாக 243 இராணுவ படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சன்டிம குமாரசிங்கவும், கௌரவ அதிதியாக மட்டக்களப்பு கல்வி வலய பிரதி கல் விப் பணிப்பாளர் திருமதி எஸ்.ரவி ராஜாவும் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினராக சுவாமி விபு லானந்தர் அழகியல் கற்கை நிறுவ கத்தின் உடற்கல்வி போதனாசிரியை திருமதி மிருணாளினி அரவிந்தன், பாடசாலையின் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் சங்க செயலாளர் திரு மதி தர்ஷினி சுந்தரேசன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் முரளி மற்றும் பெற்றார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தம்பலகாமம் பிரதேச செயலக மட்ட 48 ஆவது விளையாட்டு போட்டிகள்





(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான 48 ஆவது விளையாட்டு போட்டி அண்மையில் இடம் பெற்றது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியை உள்ளடக்கிய 42 கழகங்கள் பங்குபற்றின. இந்த விளையாட்டுப் போட்டியில் உதைப்பந்தாட்டம், கிரிக் கெட், எல்லை, கபடி, கரப்பந்து, மெய் வல்லுனர் போட்டி போன்ற போட்டிகள் இடம்பெற்றன.

இப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட வர்கள் மாவட்ட மட்ட போட்டிகளில் பங் கேற்கவுள்ளனர்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர் களுக்கான கேடயங்கள் சான்றிதழ்கள் போன்றன வழங்கப்பட்டன. இறுதிப் போட்டியாக முள்ளிப் பொத்தானை புஹாரி நகர் பொது விளையாட்டு மைதா னத்தில் இடம் பெற்ற போட்டியில் உதைப் பந்தாட்ட போட்டி இடம் பெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தம்பல காமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி கலந்து கொண்டார்.

உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், பிரதித் திட்டமிடல் பணிப் பாளர் ஐ.முஜீப், நிர்வாக உத்தியோகத் தர் உடகெதர, மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எச்.விமலசேன, விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம். ஹாரிஸ் உட்பட பலர் கலந்து கொண்ட னர்.

# சூரியசக்தி செயற்றிட்ட மற்றுமொரு உபநிலையம் மட்டக்களப்பில் திறப்பு!



(பழுவூரான்)

பெக்பே சோலர் தனியார் நிறுவனத்தின் சூரிய சக்தி செயற்றிட்டத்தின் மற்றுமொரு உபநிலையம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (10) மட்டக்களப்பு ஏறாவூர் பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொம்மாதுறை பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எஸ்.பி.எஸ். 2 வவுணதீவு 6 மற்றும் 7 ஆகிய சூரிய சக்தி செயற்திட்டத்தின் உபநிலையம் என்று பெயர் சூட்டப்பட்டு மின்சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவால் நிலையத்தின் நினைவுப் படிகம் திறைநீக்கம் செய்யப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் வவுணதீவு பிரதேசத்தில் உள்ள சூரியசக்தி நிலையத்துடன் இணைக்கப்பட்டு மின்சார விநியோகம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலாளர், செங்கலடி பிரதேச சபை செயலாளர், பெக்பே சோலர் தனியார் நிறுவனத்தின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள், பாடசாலை மாண–வர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

விவசாயிகளின் தேவைகளுக்காக வவுணதீவு பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சூரியசக்தி செயற்றிட்டமானது மேலும் விஸ்தரிக்கும் நோக்கில் ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கொம்மாதுறை பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ‘தமிழைப் போற்றிச் சைவம் வளர்ப்போம்’ அறநெறிக் கல்வி ஆன்மீகச் செயற்பாடு!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை, பெரியநீலாவணை நெக்ஸ்ட் ரெப் சமூக அமைப்பு, மட்டக்களப்பு சிவத்தொண்டர் திருக்கூடம் ஆகியன இணைந்து அம்பாறை மாவட்டத்தில் அறநெறி கல்வியை ஊக்கப்படுத்தும் செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றன.

அந்த வகையில் கல்முனை மணற்சேனை கிராமத்தில் பாலமுருகன் அறநெறி பாடசாலையில் அண்மையில் அறநெறி ஆன்மீகச் செயற்பாடு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆன்மீக தியான குருஜி என்.தேவநேசன், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் க.வரதராஜன், உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.லக்குணம் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு வெல்லாவெளிப் பகுதியில் பகலில் கிராமத்துக்குள் வந்த யானைகள்!



**(பழுவூரான்)**

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங் கரைப் பெருநிலப்பரப்புக்கு உட்பட்ட வெல்லாவெளிப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (10) உட்புகுந்த யானைகளால் அந்தப் பகுதியில் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டிருந்தது.

இதன்போது 5 யானைகள் கூட்ட மாக வெல்லாவெளிப் பகுதிக்குள் வந் துள்ளன.

இதனால் அப்பகுதியில் பெரும் பதற்ற நிலமை ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் கால போக வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயி களும் பெரும் பதற்றத்தின் மத்தியில் அவர்களது வேலைகளை இடை நிறுத்தினர்.

இந்த நிலையில் வெல்லாவெளி யில் அமைந்துள்ள வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் யானை வெடிகளை கொழுத்தி ஒருவாறு காட்டுப் பகுதிக்குள் யானைக் கூட் டத்தை துரத்தி விட்டனர்.

அப்பகுதியில் மிக நீண்டகாலமாக யானைகளின் அட்டகாசங்கள் அதிக ரித்தவண்ணம் உள்ளமை குறிப்பிடத் தக்கது.



# 2024 சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கிழக்கு இளைஞர்களது ஏற்பாட்டில் நிகழ்வுகள்

**(பாறுக் ஷிஹான்)**

2024 சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கிழக்கு இளைஞர் அமைப் பின் ஏற்பாட்டில் நிகழ்வு ஒன்று காரை தீவு தனியார் மண்டபத்தில் நடை பெற்றது.

நிகழ்வானது கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான தாணீஸ் ரஹ்மதுல் லாஹ் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கல்முனை பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சகீலா இஸ்ஸத்தீனும் கௌரவ அதிதிகளாக மயோன் நிறுவ னத்தின் பணிப்பாளரும் ரிஸ்லி முஸ் தபா கல்வி அபிவிருத்தி அமைப்பின் தலைவருமான ரிஸ்லி முஸ்தபா, காரைதீவு பிரதேச சுகாதார அதிகாரி வைத்தியர் தஸ்லீமா வஸீர், கல்முனை கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளர் ஜிஹானா அலீப், அம்பாறை மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுரேக்கா எதிரிசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# மூன்று நாள்கள் சுற்றுப்பயணம்: மீண்டும் தமிழகம் வருகிறார் மோடி

மூன்று நாள்கள் சுற்றுப்பயணமாக மார்ச் 15 ஆம் திகதி பிரதமர் மோடி மீண்டும் தமிழகம் வரவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

பிரதமர் மோடி கடந்த ஜனவரி 2 ஆம் திகதி திருச்சிக்கு வந்து, விமான நிலைய புதிய முனையம் உள்ளிட்ட திட்டங்களை தொடங்கி வைத்தார். 2 ஆவது முறையாக ஜனவரி 19 ஆம் திகதி தமிழகம் வந்த அவர், சென்னையில் கேலோ இந்தியா போட்டிகளை தொடங்கி வைத்தார். 20, 21 ஆம் திகதி களில் திருச்சி ஸ்ரீரங்கம், இராமேசுவரம், தனுஷ் கோடி கோயில்களுக்குச் சென்று வழிபட்டார்.

3 ஆவது முறையாக பெப்ரவரி 27ஆம் திகதி பல்லடத்தில் நடந்த 'என் மண், என் மக்கள்' யாத்திரை நிறைவு விழா பொதுக்கூட்டத்திலும், மதுரையில்



நடந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்றார். மீனாட்சி அம்மன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார். 28 ஆம் திகதி தூத்துக்குடியில் நலத்திட்டங்களை தொடங்கி வைத்தார்.

திருநெல்வேலியில் நடந்த பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பங்கேற்றார். 4 ஆவது முறையாக கடந்த 4 ஆம் திகதி மோடி தமிழகம் வந்தார். இதன்போது, கல்பாக்கத்தில் விரைவு ஈனுலையை தொடங்கி வைத்தார். சென்னை நந்தனத்தில் நடந்த பா.ஜ.க. பொதுக் கூட்டத்தில் பங்கேற்றார்.

இந்த நிலையில், இந்த ஆண்டில் 5 ஆவது முறையாக பிரதமர் மோடி தமிழகம் வர இருகின்றார் என தகவல் வெளியாகி உள்ளது. மூன்று நாட்கள் சுற்றுப்பயணமாக மார்ச் 15 ஆம் திகதி பிரதமர் மோடி மீண்டும் தமிழகம் வரவுள்ளார் என்று சொல்லப்படுகிறது.

ஏற்கெனவே, எதிர்வரும் 22 ஆம் திகதி பிரதமர் தமிழகம் வருவார் எனச் சொல்லப்பட்டுள்ள நிலையில் அதற்கு முன்னதாகவே, மார்ச் 15 இல் தமிழகம் வரவுள்ளார். அதன்படி, மார்ச் 15 ஆம் திகதி சேலத்துக்கு பிரதமர் மோடி வருகின்றார். அங்கு நடைபெறும் பா.ஜ.க. பொதுக் கூட்டத்தில் அவர் பங்கேற்கிறார். சேலத்தை அண்மித்துள்ள 4 மக்களவை தொகுதிகளுக்கு பரப்புரை மேற்கொள்ளும் வகையில் அந்த பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

# புதிய சட்டம் மூலம் தேர்தல் ஆணையர் நியமனம்: தடை கோரி உச்ச நீதிமன்றத்தில் காங்கிரஸ் வழக்கு

வெற்றிடமாகியுள்ள தேர்தல் ஆணையர் இடங்களை புதிய சட்டங்களை கொண்டு நிரப்ப தடை கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் பதியப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜெயா தாகூர் என்பவர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

இந்திய தலைமை தேர்தல் ஆணையராக ராஜீவ் குமார் பதவி வகிக்கிறார். தேர்தல் ஆணையர்களாக அனூப் சந்திர பாண்டே, அருண் கோயல் ஆகியோர் பணியாற்றி வந்தனர். இதில் அனூப் சந்திர பாண்டே கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி ஓய்வு பெற்றார். மற்றொரு தேர்தல் ஆணையரான அருண் கோயல் நேற்று முன்தினம் திடீரென இராஜினாமா செய்தார். அடுத்தடுத்த இராஜினாமாக்கள் தேர்தல் ஆணையர்கள் பதவிகள் வெற்றிடமாகின.

காலியாக உள்ள தேர்தல் ஆணையர் பதவியிடங்களுக்கு புதிய ஆணையர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடங்கி உள்ளது. மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், மத்திய உள்துறை செயலர், மத்திய பணியாளர் துறை செயலர் உள்ளிட்டோர் அடங்கிய உயர்நிலை குழு ஆலோசனை நடத்தி, 2 பதவிகளுக்கும் தலா 5 பேரின் பெயர்களை மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யும்.

இதைத் தொடர்ந்து, பிரதமர் மோடி, மூத்த மத்திய அமைச்சர், மக்களவை காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி ஆகியோர் அடங்கிய மூவர் குழு வரும் 15-ம் தேதி டெல்லியில் கூடி புதிய தேர்தல் ஆணையர்கள் தொடர்பாக ஆலோசனை நடத்தவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.




இதற்கிடையே, வெற்றிடமாகியுள்ள தேர்தல் ஆணையர் இடங்களை புதிய சட்டங்களை கொண்டு நிரப்ப தடை கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு பதியப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜெயா தாகூர் என்பவர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். சமீபத்தில் இயற்றப்பட்ட தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (சேவை நிபந்தனைகள் மற்றும் அலுவலக விதிமுறைகள்) சட்டம், 2023 இன் கீழ் புதிய தேர்தல் ஆணையரை நியமிக்க மத்திய அரசுக்குத் தடை விதிக்க வேண்டும் என ஜெயா தாகூர் தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, தேர்தல் ஆணையர்களை தேர்ந்தெடுக்கும் குழுவில், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி இடம்பெற்றிருப்பார். ஆனால், இந்தக் குழுவில் தற்போதைய மத்திய அரசு தேர்தல் ஆணையர்களை தேர்ந்தெடுக்கும் சட்டவிதியில் திருத்தம் கொண்டுவந்தது. புதிய சட்டத்தின்படி, பிரதமராக இருப்பவர், அவரால் நியமிக்கப்பட்ட ஒரு மத்திய அமைச்சர் மற்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய மூன்று பேர் அடங்கிய குழுவே தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்களை தேர்ந்தெடுக்க முடியும்.

அந்த வகையில் பிரதமர் மோடி, மூத்த மத்திய அமைச்சர், மக்களவை காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி ஆகியோர் மார்ச் 15 ஆம் திகதி தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பாக ஆலோசிக்க உள்ளதாக கூறப்படுகிறது.

இதுவரை இந்த குழு எந்த தேர்தல் ஆணையர்களையும் தேர்ந்தெடுத்ததில்லை. அருண் கோயல் இராஜினாமாவை தொடர்ந்து வெற்றிடமாகியுள்ள 2 தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பாக முதல்முறையாக இந்தக் குழு ஆலோசிக்க இருக்கிறது.

இந்த சூழலில்தான் இந்த புதிய சட்டங்களை கொண்டு தேர்தல் ஆணையர்களை நியமனம் செய்ய தடை விதிக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜெயா தாகூர் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு பதிந்துள்ளார்.

அந்த வழக்கில் பிரதமர், இந்தியத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழுவால் தேர்தல் ஆணையர்களை நியமிக்க வேண்டும் என்றும், உச்ச நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை மத்திய அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



# ராஜஸ்தான் காங்கிரஸ் தலைவர்கள் பாரதிய ஜனதா கட்சியில் இணைந்தனர்

மக்களவைத் தேர்தல் நெருங்கும் நிலையில், ராஜஸ்தானில் காங்கிரஸ் கட்சியில் இருந்த முன்னாள் எம்.எல். ஏக்கள் ரிச்பால் மிர்தா, அவரது மகன் விஜய்பால் மிர்தா மற்றும் கிலாடி பைர்வா, முன்னாள் மாநில காங்கிரஸ் தலைவர் சிவ தல் சுரேஷ் சவுத்தரி, ராம்பால் சர்மா மற்றும் ரிஜு ஜுன்ஜுன் வாலா, முன்னாள் அமைச்சர்கள் ராஜேந்திர யாதவ், லால் சந்த் கட்டாரியா ஆகியோர் நேற்று பா.ஜ.கவில் இணைந் தனர்.

இவர்களில் ரிச்பால் மிர்தா, முன் னாள் காங்கிரஸ் எம்.பி ஜோதி மிர்தா வின் நெருங்கிய உறவினர். இவர் கடந்த ஆண்டு பா.ஜ.கவில் இணைந் தார். தற்போது நாகர் தொகுதி பா.ஜ.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். மிர்தா குடும்பத்தினர் ஜாட் சமூகத்தினர் அதிகம் உள்ள நாகர் தொகுதியில் செல்வாக்குமிக்கவர்கள் என்பது குறிப் பிடத்தக்கது. முன்னாள் சுயேட்சை எம். எல்.ஏ அலோக் பெனிவாலும்பா. ஜ.கவில் நேற்று இணைந்தார். இவர் குஜராத் முன்னாள் ஆளுநர் கமலா பெனிவாலின் மகன் ஆவார். இவர்களை ராஜஸ்தான் முதல்வர் பஜன்லால் சர்மா, மாநில பா.ஜ.க. தலைவர் சி.பி.ஜோஷி மற்றும் மத்திய அமைச்சர் புபேந்திர யாதவ் ஆகியோர் வரவேற்றனர்.

# 44 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேம்பாட்டு திட்டம்: உத்தர பிரதேசத்தில் பிரதமர் மோடி ஆரம்பித்தார்




உத்தர பிரதேச மாநிலம் அசம்கரில் 44 ஆயிரம் கோடி ரூபா மதிப்பிலான 782 வளர்ச்சி திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

உத்தர பிரதேச மாநிலம் அசம்கரில், ரயில்வே, நகர்ப்புற மேம்பாடு, வீதி போக்குவரத்து, கல்வி மேம்பாடு என பல்வேறு மேம்பாட்டு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

இந்த நிகழ்வில்பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

“ஒரு காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் தலைநகர் டெல்லியில்தான் நடைபெறும். அங்கு மற்ற மாநிலங் களை சேர்ந்தவர்கள் கலந்து கொள்வார்கள். இன்று இந்த நிகழ்வு அசம்கரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் இங்கு வந்து பங்கேற்றுள்ள னர்.

34,000 கோடி ரூபா மதிப்பிலான உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு தொடக்க விழா நடத்தப்பட்டுள்ளது. மேலும், டில்லி டெர்மினல்-1 விரிவாக்கம் உட்பட 10,000 கோடி ரூபா மதிப்பிலான 15 விமான நிலைய திட்டங்களும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இது விமான போக்குவரத்து துறைக்கு உத்வேகம் அளிக்கும்.

கடப்பா, ஹுப்பள்ளி, பெலகாவி ஆகிய இடங்களில் மொத்தம் 908 கோடி ரூபா செலவில் ஆண்டுக்கு 95 லட்சம் பயணிகளை கையாளும் திறன் கொண்ட புதிய முனையங்கள் அமைக் கப்படும். ஆண்டுக்கு 6.15 கோடி பயணிகளை கையாளும் திறனுடன் 12 புதிய முனையங்கள் மொத்தம் 8,903 கோடி ரூபா செலவில் கட்டப்ப டுகின்றன.

மேலும், இந்த விரிவாக்க திட்டத்தின் ஒரு பகுதியாக புனே,கோலாப்பூர், குவா லியர், ஜபல்பூர், டெல்லி, லக்னோ, அலிகார், அசம்கர், சித்ரகூட், மொரா தாபாத், ஷ்ரவஸ்தி மற்றும் அடம்பூர் விமான நிலையங்களில் புதிய முனைய கட்டடங்கள் திறக்கப்பட்டுள்ளன.” - என்றார்



## ஒஸ்கர் 2024 விருது பட்டியல்:

# சிறந்த படம் 'ஒப்பன்ஹெய்மர்', சிறந்த நடிகை எம்மா ஸ்டோன்

கடந்த 2023 ஆம் ஆண்டு வெளியான படங்களுக்கான ஒஸ்கர் விருது வழங்கும் விழா அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்றுள்ளது.

இதில் கிறிஸ்டோபர் நோலன் இயக்கிய 'ஒப்பன்ஹெய்மர்' படம் ஏழு விருதுகளை வென்று ஆதிக்கம் செலுத்துகிறது.

இந்த விழாவில் சிறந்த படம், சிறந்த இயக்குநர், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த உறுதுணை நடிகர், சிறந்த உறுதுணை நடிகை, சிறந்த திரைக்கதை, சிறந்த ஒரிஜினல் பாடல், சிறந்த ஒரிஜினல் ஸ்கோர், சிறந்த அனிமேஷன் Feature, சிறந்த ஆவணப்பட Feature, சிறந்த ஆடை வடிவமைப்பு, சிறந்த ஒப்பனை, சிறந்த புரொடக்ஷன் டிசைன், சிறந்த ஒலி, சிறந்த பிலிம் எடிட்டிங், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த விஷுவல் எஃபெக்ட்ஸ், சிறந்த லைவ் ஆக்ஷன், சிறந்த ஆவணப்பட ஷார்ட் உள்ளிட்ட பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டன.



இதில் வெற்றி பெற்றவர்களின் முழு பட்டியல்:

சிறந்த படம்: ஒப்பன்ஹெய்மர், சிறந்த நடிகர்: சிலியன் மர்ஃபி (ஒப்பன் ஹெய்மர்), சிறந்த நடிகை: எம்மா ஸ்டோன் (புவர் திங்ஸ்), சிறந்த உறுதுணை நடிகர்: ராபர்ட் டவுனி ஜுனியர் (ஒப்பன்ஹெய்மர்), சிறந்த உறுதுணை நடிகை: டாவின் ஜாய் ராண்டால்ஃப் (தி ஹோல்டோவர்ஸ்), சிறந்த இயக்குநர்: கிறிஸ்டோபர் நோலன் (ஒப்பன் ஹெய்மர்), சிறந்த அனிமேஷன் திரைப்படம்: தி பாய் அண்ட் தி ஹெரான், சிறந்த தழுவல் திரைக்கதை: அமெரிக்கன் ஃபிக்ஷன், சிறந்த அசல் திரைக்கதை: அனாடமி ஆஃப் எ ஃபால், சிறந்த ஒளிப்பதிவு: ஒப் பன் ஹெய்மர்,சிறந்த ஆடை வடிவ மைப்பு: நெப் போலியன், சிறந்த ஆவ ணப்படம்: 20 டேஸ் இன் மரியுபோல், சிறந்த ஆவணக் குறும்படம்: தி லாஸ்ட் ரிப்பேர் ஷாப்,சிறந்த எடிட்டிங்: ஒபன் ஹெய் மர்,சிறந்த சர்வதேச திரைப்படம்: தி ஸோன் ஆஃப் இன்ட்ரஸ்ட், சிறந்த ஆடை வடிவமைப்பு , சிகை அலங்காரம்: புவர் திங்ஸ், சிறந்த ஒரிஜினல் இசை: இண்டி யானா ஜோன்ஸ் அண்ட் தி டயல் ஆஃப் டெஸ்டினி, சிறந்த ஒரிஜினல் பாடல்: வாட் வாஸ் ஐ மேட் ஃபார்? (பார்பி), சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு: புவர் திங்ஸ், சிறந்த அனிமேஷன் குறும்படம்: வார் இஸ் ஓவர், சிறந்த லைவ் ஆக்ஷன் குறும்படம்: தி ஒண்டர்ஃபுல் ஸ்டோரி ஆஃப் ஹென்றி சுகர், சிறந்த ஒலி: தி ஸோன் ஆஃப் இன்ட்ரஸ்ட், சிறந்த விஷுவல் எஃபெக்ட்ஸ்: காட் ஜில்லா மைனஸ் ஒன்.


இதில் சிறந்த திரைப்படம் பிரிவில் பத்து படங்கள் பரிந்துரைக்கப்பட்டன. கிறிஸ்டோபர் நோலன் இயக்கிய 'ஒப்பன்ஹெய்மர்', 'அமெரிக்கன் ஃபிக்ஷன்', 'அனாடமி ஆஃப் எ ஃபால்', 'பார்பி', 'தி ஹோல்டோவர்ஸ்', 'கில்லர்ஸ் ஆஃப் தி பிளவர் மூன்', 'மேஸ்ட்ரோ', 'பாஸ்ட் லைவ்ஸ்', 'புவர் திங்ஸ்', 'தி ஸோன் ஆஃப் இன்ட்ரஸ்ட்' ஆகிய படங்கள் இந்த பட்டியலில் இடம்பெற்றிருந்தன.

இந்த பட்டியலில் தற்போது கிறிஸ்டோபர் நோலன் இயக்கிய 'ஒப்பன்ஹெய்மர்' சிறந்த திரைப்படமாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.










# ஒஸ்கார் விருது வழங்கும் மேடையில் நிர்வாணமாக ஏறினார் ஜோன் சீனா

ஒஸ்கார் விருது வழங்கும் மேடையில் ஜோன் சீனா நிர்வாணமாக ஏறியுள்ளார்.

96 ஆவது 'ஆஸ்கார்' திரைப்பட விருது வழங்கும் விழா இடம்பெற்றுள்ள நிலையில் அதில் சிறந்த ஆடை வடிவமைப்பிற்கான விருதை யார் வெல்வார் என அறிவிப்பதற்கு, நடிகர் ஜோன் சீனா மேடை ஏறியுள்ளார் .

இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் மத்தியில் பிரபலமடைந்துள்ள ஹொலிவுட் நடிகரும், குத்துச்சண்டை வீரருமான, 46 வயதுடைய ஜோன் சீனா நிர்வாணமாக மேடைக்கு வந்துள்ளார். இந்த சம்பவம் அனைவருக்குமிடையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



# அமெரிக்க இராணுவ தளம் மீது ஆளில்லா விமானம் தாக்குதல்

சிரியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள அமெரிக்க இராணுவத் தளம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஆளில்லா விமானத் தாக்குதலுக்கு உள்ளானதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் செய்தி நிறுவனத்தின்படி, சிரியாவின் கிழக்கு மாகாணமான Deir ez-Zur இல் உள்ள கொனிகோ எரிவாயு வயலில் உள்ள அமெரிக்க இராணுவ தளம் இரண்டு ட்ரோன்கள் மூலம் தாக்குத லுக்கு உள்ளாகியதாக தெரிவித்துள்ளது.

ஆளில்லா விமானத் தாக்குதலின் விளைவாக, அமெரிக்க இராணுவத் தளத்திலிருந்து புகை மண்டலம் வெளிவந்தது. எனினும், தாக்குதலின் பின்னரான மேலதிக விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

காசா பகுதியில் இஸ்ரேலிய ஆட்சியின் இனப்படுகொலைப் போர் தொடங்கியதைத் தொடர்ந்து ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள அமெரிக்க இராணுவ நிலைகள் தாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# நியூசிலாந்தின் ஒக்லாண்ட்டிற்கு பயணித்த விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு

## 50 இற்கு மேற்பட்டோர் காயம்

அவுஸ்ரேலியாவின் சிட்னியிலிருந்து நியூசிலாந்தின் ஒக்லாண்ட்டிற்கு பயணித்துக்கொண்டிருந்த விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக 50 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை காயமடைந்தவர்களில் 13 பயணிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

லட்டம் எயர்லைன்ஸிற்கு சொந்தமான எல்.ஏ. 800 விமானத்திலேயே தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளது.

மேற்படி விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதனால் விமானம் தடுமாறத்தொடங்கியது என லட்டம் எயர்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, விமானம் ஒக்லாண்டில் தரையிறங்கியதும் தயார் நிலையில் நின்ற நோயாளர் காவு வண்டியில் பயணிகள் அவசர அவசரமாக ஏற்றப்பட்டனர். அத்துடன் நோயாளர் காவுவண்டியில் பணியாற்றுபவர்கள் பயணிகளை உடனடியாக மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தினர்.




பயணிகள் 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில் ஒருவர் கடுமையாக பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளார் என்றும் நோயாளர் காவுவண்டி சேவை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் 13 பயணிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.



பக்கங்கள் 04

கனடா முரசு

திங்கட்கிழமை 11/03/2024

## ஜமைக்கா கூட்டத்துக்கு கனடாவின் பிரதிநிதியும்

ஒன்ராறியோ,மார்ச்11

ஹைட்டியில் அதிகரித்து வரும் குழு வன்முறைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு கரீபியன் தீவுகளின் தலைவர்களால் C2



# காஸாவிற்கு மனிதநேய உதவிகளை வழங்குவதற்கான முயற்சியில் கனடா

**ஒன்ராறியோ,மார்ச் 11**

**காஸாவிற்கு மனிதநேய உதவிகளை வழங்குவதற்கான சர்வேதச முயற்சியில் கனடா இணைந்து கொள்ளும் என வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி தெரிவித்துள்ளார்.**

சைப்ரஸ் ஊடாக கடல்வழியாக காஸா விற்கான உதவிகளை அதிகரிப்பதற்கு சர்வேதச நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிகார அமைச்சர் மெலானி ஜொலி மற்றும் ஐக்கிய இரபு இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சர் ஷேக் அப்துல்லா பின் ஷயெத் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பினைத் தொடர்ந்தே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தின் போது காஸாவுக்கான உதவிகளை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதாக அமைச்சர் மெலானி ஜொலியின் சமூக ஊடகப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# நெடுஞ்சாலை துப்பாக்கிப் பிரயோகம் ஒன்ராரியோப் பொலிஸார் விசாரணை

ஒன்ராறியோ, மார்ச் 11

மார்ச் 10ஆம் திகதி காலையில் நெடுஞ்சாலை 6இல் இடம்பெற்ற துப் பாக்கிப் பிரயோகம் குறித்து ஒன்ராறியோ மாநில பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தமக்கு காலை 5 மணிக்கு தகவல் C2



# பாலியல் பலாத்கார சம்பவம் சந்தேகநபருக்கு வலைவீச்சு

ஒன்ராரியோ,மார்ச் 11

பாலியல் பலாத்காரத்துடன் சம்பந்தப்பட்ட நபர் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

மார்ச் 8ஆம் திகதி மாலையில் வோர்டன் அவனியு மற்றும் எல்ஸ்மெயர் வீதி அருகில், பேர்ச்மவுடன்ட் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்தேகநபர் வீதியில் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தில் இருந்த பெண்ணின் மீது பாலியல் பலாத்காரத்தைப் பிரயோகித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட சந்தேகநபரின் படத்தை வெளியிட்டுள்ள பொலிஸார், அவரைப் பற்றி தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.



**ஜமைக்கா...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

விடுக்கப்பட்ட அழைப்புக்கு அமைய ஜமைக்காவில் நடைபெறவுள்ள அவசர கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகக் கனடா தனது பிரதிநிதியை அனுப்பி வைத்துள்ளது.

ஐக்கிய நாடுகளுக்கான கனேடியத் தூதுவர் பொப்ரே கனடாவின் பிரதிநிதியாக இந்த கூட்டத்தில் கலந்துகொள்வார் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்திற்கு அமெரிக்க, பிரான்ஸ் மற்றும் பிரான்ஸ் உள்ளடங்கலாக ஐ.நாவின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**நெடுஞ்சாலை...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கிடைத்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் 20 வயதுடைய இரு பெண்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையுடன், ஒரு வரின் நிலை கவலைக்கிடமானதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல் தெரியுமாயின் பொலிஸாருக்குத் தெரிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.



# கியூபெக் நகரத்தில் கடும் பனிப் பொழிவு

கியூபெக், மார்ச் 11

மார்ச் 10ஆம் திகதி கியூபெக் நகரத்தில் மற்றும் சார்லிவோ பிராந்தியத்தில் 35 செ.மீ அளவில் பனிப்பொழிவு பதிவாகியுள்ளது.

இதனால் மார்ச் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலையில், கியூபெக் பகுதியில் 121,000 வீடுகளுக்கு மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை மாலை வரை அரைப்பகுதியினருக்கு மாத்திரம் மின்னிணைப்பு மீள வழங்கப்பட்டிருந்தது.

இன்று திங்கட்கிழமை காலையிலும் குளிருடன் கூடிய மழை நீடிக்கும் எனச் சுற்றுச்சூழல் கனடா தெரிவித்துள்ளது.

தாழ்நிலப் பகுதியில் வெள்ள அபாயம் இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.



## வீதி விபத்தில் யுவதி மரணம்!

ஒன்றாரியோ,மார்ச்11

நெடுஞ்சாலை 417இல் நடந்து சென்ற 25 வயதான பெண் ஒருவர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், குறித்த பெண் மீது பல வாகனங்கள் மோதியுள்ளன. கடும் காயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதன் பின்னர் அபர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கனடா - இஸ்ரேல் அமைச்சர்கள் பேச்சு

ஒன்றாரியோ,மார்ச் 11

கனேடிய மற்றும் இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையிலான சந்திப்பு ஒன்று மார்ச் 10ஆம் திகதி இடம்பெற்றது.

இஸ்ரேல் தொடர்பின் கனடாவின் நிலைப்பாட்டை கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி இதன் போது மீள்வலியுறுத்தியதாக வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் இஸ்ரேலில் ஹமாஸ் முன்னெடுத்த வன்முறைச் செயல்களை கனடா கண்டித்து வருகின்றது.

காஸாவில் ஹமாஸின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இஸ்ரேல் பணயக்கைதிகளின் மீதான பாலியல் வன்முறைகளையும் அவர் கண்டித்துள்ளார்.



# முஸ்லிம் கனேடிய மக்கள் நாட்டுக்கு ஆற்றும் பங்களிப்பு மகத்துவமானது

## றமழான் வாழ்த்தில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிப்பு

ஒன்ராரியோ,மார்ச்11

இரக்கம், நன்றியுணர்வு மற்றும் குடும்பத்தின் மதிப்புகளை மதிக்க றமழான் ஒரு வாய்ப்பை வழங்குவதாக கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

றமழான் நோன்பு காலத்தின் ஆரம்பத்தையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வரவிருக்கும் வாரங்களில், குடும்பத்தினரும் நண்பர்களும் ஒன்றுசேர்ந்து தொழுகை செய்து, இரக்கம் மற்றும் தாராள மனப்பான்மை மூலம் மற்றவர்களுக்குத் திரும்பக் கொடுக்கும், சூரிய அஸ்தமனத்தில், இஃப்தாருக்கு கூடும் நீண்ட நோன்பு பாரம்பரியத்தை அவர் இந்த அறிக்கையில் நினைவுபடுத்தியுள்ளார்.

நம் அனைவருக்கும், முஸ்லிம் கனேடியர்கள் நமது நாட்டிற்கு ஆற்றிய மற்றும் தொடர்ந்து செய்து வரும் விலைமதிப்பற்ற பங்களிப்பை அங்கீகரிக்கும் ஒரு வாய்ப்பாகும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 1.8 மில்லியன் முஸ்லிம்கள் கனடாவை தாயகம் என்று அழைக்கிறார்கள், அவர்களால் நம் நாடு மிகவும் வளமாக இருக்கிறது எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு, காஸாவில் மிதாபிமான நெருக்கடி தொடர்ந்துவரும் சவாலான நேரத்தில் புனித மாதம் வருகிறது எனவும், காஸாவில் நிலையான போர்நிறுத்தம் மற்றும் பொதுமக்களுக்கு பாதுகாப்பான, தடையின்றி மனிதாபிமான நிவாரணத்திற்கான அழைப்பை கனடா மீண்டும் உறுதிப்படுத்துகிறது எனவும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் சமூகங்கள் இரக்கத்துடன் ரமழானைக் கடைப்பிடிக்கும்போது, இஸ்லாமிய வெறுப்பு, இனவெறி மற்றும் வெறுப்பு போன்ற அனைத்து வடிவங்களிலும், அவை எங்கு, எப்போது நிகழ்ந்தாலும் அவற்றை எதிர்த்து நிற்க வேண்டிய நமது கூட்டுக் கடமை என பிரதமர்ட்ரூடோநினைவுபடுத்தியுள்ளார்.



# துப்பாக்கிப் பிரயோகத்தில் பிறம்டனில் ஒருவர் காயம்!

ஒன்ராரியோ, மார்ச் 11

பிறம்டன் பகுதியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கடும் காயமடைந்துள்ளார்.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்திற்கு காரணம் என்னவெனத் தெரியவில்லை என பீல் பிராந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் 16-18 வயதுக்கு இடைப்பட்டவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.